6. அறிவிப்புகள்

(இ) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பற்றிய விவரங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்ற 9-வது பேரவையின் மூன்றாவது கூட்டத் தொடர் 18-1-1990 ஆம் நாளன்று தொடங்கி 27-1-1990 வரையிலும், நான்காவது கூட்டத் தொடர் 17-3-1990 அன்று தொடங்கி இன்று (12-5-1990) வரையிலும் நடைபெற்றுள்ளது.

பேரவை கூடிய மொத்த நாட்கள் ..	48
மாலையிலும் பேரவை கூடியுள்ள நாட்கள் ..	9
அவைக் கூட்டம் நடைபெற்ற மொத்த நேரம் ..	245 மணி 54 மணித் துளிகள்.

18-1-1990 ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் பேரவையில் உரையாற்றினார்கள்.

ஆளுநர் உரை மீது விவாதம் நடைபெற்ற நாட்கள்	6
பங்கு கொண்ட உறுப்பினர்கள் ..	41

1990-91 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை 17-3-1990 ஆம் நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவைக்குப் படைத்தார்கள்.

நிதி அலுவல்கள் :

வரவு செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் நடைபெற்ற நாட்கள்.	7
பங்குகொண்ட உறுப்பினர்கள் ..	58
மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெற்ற மொத்த நாட்கள்.	24
உறுப்பினர்கள் ஆற்றிய உரைகள் ..	321
கொடுக்கப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ..	2,479
அவைமுன் வைக்கப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள்	2,322
விவாதித்து நிறைவேற்றப்பட்ட மானியக் கோரிக்கைகள்.	59

[பேரவைத் தலைவர்] [1990 மே 12

அவசரத் தன்மை வாய்ந்த மிக முக்கியமான பொதுப் பொருள்களைக் குறித்து ''தகவல் கோரல்'' என்ற முறையிலோ 'Zero-hour '' என்ற வகையிலே சொல்லப் படுகிற, நேரம் இல்லாத நேரத்தில்—நேரம் கெட்ட நேரத்தில் அல்ல (சிரிப்பு) நேரம் இல்லாத நேரத்தில்—உறுப்பினர் களுக்கு 111 தடவைகள் அனுமதிகள் வழங்கப் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதுவரை நடந்த எந்த சட்டமன்றப் பேரவைக் கூட்டத்திலும் இந்த அளவிற்கு வாய்ப்புகள் வழங்கப்படவில்லை என்பதையும் அழுத்தமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

வினாக்கள் — விடைகள் :

குறுகிய கால வினாக்கள் ...	6
உடுக்குறியிட்ட வினாக்கள் ...	508
உடுக்குறியிடாத வினாக்கள்	850
துணை வினாக்கள் ...	2,167

கவன ஈர்ப்புகள் :

அனுமதிக்கப்பெற்றவை ...	185
அவையில் எடுத்துக்கொள்ளப்பெற்றவை ...	65

ஒத்திவைப்புத் தீர்மானங்கள் :

அவையில் எடுத்துக் கொண்டு இசைவு மறுக்கப் பெற்றவை.	10

உரிமை மீறல் குறித்த பிரச்சினைகள் :

அவையில் எழுப்பப்பெற்றவை ...	3
இசைவு மறுக்கப்பெற்றவை ...	4

உரிமைக் குழுவிற்கு எவையும் அனுப்பப் பெறவில்லை.

அரசினர் சட்ட முன்வடிவுகள் :

அறிமுகம் செய்யப்பெற்றவை ...	35
நிறைவேற்றப்பெற்றவை ...	33

அரசினர் தனித் தீர்மானங்கள் :

வரப்பெற்றவை 4

நிறைவேற்றப்பெற்றவை 4

பேரவைக் குழுக்கள் அவைக்கு அளித்துள்ள அறிக்கைகள் 78

பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் :

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும் 187

(ஆ) அறிக்கைகள். அறிவிக்கைகள், ஏனைய தாள்கள். 233

பார்வையாளர்கள் :

பார்வையாளர்கள் மாடத்தில் அனுமதிக்கப்பெற்ற—

ஆண்கள் 22,922 பேர்

பெண்கள் 2,288 பேர்

தலைவர் மாடத்தில் அனுமதிக்கப் பெற்றவர்கள் 16,064 பேர்.

இதுவரையில் பேரவை நிகழ்ச்சிகளைக் காண வருகை தந்தோருடைய மொத்த எண்ணிக்கை-41,274 பேர்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நூலகம் :

சட்டமன்ற நூலகத்திற்கு வருகை தந்தோர்— 863 பேர்.

வழங்கப்பெற்ற நூல்கள்— 728.

நடவடிக்கைக் குறிப்புகள் :

தட்டச்சு செய்யப் பெற்ற மொத்தப் படிகள் — 11,049

எல்லா நாட்களும் அவைக்கு வந்திருந்த உறுப்பினர்கள் — 20

அவர்களின் பெயர்களை வேகமாகப் படிக்கிறேன். அப்போது தான் அவர்களுக்கு மதிப்பாக இருக்கும் ; மற்றவர்களுக்கும் வழிகாட்டுதலாக இருக்கும்.

1. திரு. எம். அண்ணாமலை
2. திரு. ச. அழகுவேலு
3. திரு. வ. அன்பழகன்
4. திரு. வி.கே. இராசு
5. திரு. இளம்வழுதி
6. திரு. எஸ். குணசேகரன்
7. திரு. வெ. கோவிந்தன்
8. திரு. சி. சண்முகம்
9. டாக்டர் த. சாந்தகுமாரி
10. திரு. கே. சுந்தர்
11. திரு. பொ. நடராசன்
12. திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம்
13. திரு. கே. பிச்சாண்டி
14. திரு. கோ. பூவராகன்
15. திரு. எம். முத்தையா
16. திரு. கே. ரவி அருணன்
17. திரு. உ.ரா. வரதராசன்
18. திரு. வெ. வெங்கடாசலம்
19. திரு. ஆர்.எஸ். ஸ்ரீதர்
20. திரு. மு.க. ஸ்டாலின்

ஒரு நாள் மட்டும் வராதவர்கள் :

1. திரு. என். கணபதி
2. திரு. சி. கோவிந்தராஜன்
3. திரு. செ. இராமலிங்கம்
4. திரு. வ. முல்லைவேந்தன்
5. திரு. வீ. தமிழ்மணி

1990 மே 12] [பேரவைத் தலைவர்]

சட்டமன்றப் பணிகளைத் தொடர்ந்து இடையறாது, இடைவிடாது நாள்தோறும் ஆற்றி வருகின்ற அருமைக்குரிய தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்களையும், பெருமைக்குரிய பேரவை முன்னவர் அவர்களையும், ஏனைய அமைச்சர் பெருமக்களையும், எதிர்க் கட்சித் தலைவரையும் நெஞ்சாரப் பாராட்டுகிறேன்.

14-25 மணி

உரிய நேரத்தில் அலுவல்களைச் சீரிய முறையில் நிறைவேற்றுவதற்கு எனக்கு உறுதுணையாக இருந்த பேரவைத் துணைத் தலைவர் மாண்புமிகு திரு. வீ. பெ. துரைசாமி அவர்களுக்கும், மாற்றுத் தலைவர்களான திரு. சா. கணேசன், டாக்டர் க. காஞ்சனா, திருவாளர்கள் வே. தங்கபாண்டியன், கே. அர்ஜுனன், எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், கோ. பூவராகன், அ. லெ. சுப்பிரமணியன், பெ. சு. திருவேங்கடம், இரா. மோகன். கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன், குமரி அனந்தன், உ. ரா. வரதராசன் ஆகியோருக்கும் என் நன்றி உரித்தாகுக.

அவையின் செவ்வியை மனதிலிருத்தி சிறப்பான முறையில் ஒத்துழைப்பு நல்கிய அனைத்துக் கட்சிகளின் தலைவர்களுக்கும், துணைத் தலைவர்களுக்கும், கட்சிகளின் கொறடாக்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவையில் கட்டற்ற பேச்சுரிமை இருந்தாலும் கண்ணியம் என்ற கட்டுப்பாட்டுக்குள் நின்று கடமையாற்றிய உறுப்பினர் பெருமக்கள் அனைவருக்கும் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது நல ஆர்வத்துடன், பேரவை நடவடிக்கைகளை நன்முறையில் மக்களுக்கு விரைந்து எடுத்துச் செல்லும் செய்தி இதழ்கள், தொலைக்காட்சி, வானொலி ஆகியவற்றின் செய்தியாளர்களுக்கும் எனது இதயப்பூர்வமான பாராட்டுக்கள்.

இந்த அவையினுடைய அலுவல்கள் செம்மையாக நிறைவேறிட மிகப் பெருமிதமான ஈடுபாட்டுடன் எனக்குத் துணை நின்ற பேரவைச் செயலாளர் திரு. சி. கு. இராமசாமி அவர்களுக்கும், பேரவையின் ஏனைய அலுவலர்களுக்கும், பாதுகாப்பு அலுவலர்களுக்கும் நம் பேரவையின் வாயிலாக நெஞ்சம் நிறைந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் தந்த வாய்ப்புகளை ஏந்தி மன்றத்தில் இடம்பெற்ற பல்லோர், முக்கியம் என்று உணர்ந்ததெல்லாம் பேச முறையான வாய்ப்பளித்தோம் என்ற எக்களிப்பில் நான் மகிழச் செய்த எல்லோருக்கும் நன்றி.

இந்தமன்றில் தக்கதொருதரம் நிலவச்செய்த
சான்றோர்க்கு என் வணக்கம் சொன்னேன்.

இந்தமன்றில் எடுத்துவைத்த வாதம்
இடையிடையே வாய்வீச்சில் மோதல்,

செந்தமிழர் நலிவெல்லாம் தீர
தேர்ந்தெடுத்த எத்தனையோ திட்டம்

எந்தஒரு குடிமகனும் நாட்டை
ஏமாற்றத் தடைவிதிக்கும் சட்டம்

தந்தோர்க்கு நன்றிசொல்ல வேண்டும்
வரும்நாளில் சந்திப்போம் மீண்டும்!

II. அரசினர் தீர்மானம்.

பேரவையை நாள் குறிப்பிடாமல் ஒத்திவைத்தல்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"பேரவை விதி 25 (1)-இன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இக்கூட்டத் தொடரின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் பேரவை ஒத்திவைக்கப் பெறுகிறது. வணக்கம்.

பின்னர் 14-27 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல், பேரவை ஒத்திவைக்கப்பெற்றது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS